NEWS RELEASE
SRI RAMACHANDRA
INSTITUTE OF HIGHER EDUCATION AND RESEARCH
(Category - I Deemed to be University) Porur, Chennai
Ph.: 044-23860217. www.sriramachandra.edu.in

# SRIHER OPENS HEALTHCARE INNOVATION INCUBATION CENTRE

Chennai, 12th October 2021

A healthcare innovation incubation centre (Sri Ramachandra Innovation Incubation Centre-BioNEST Bioincubator) was inaugurated at Sri Ramachandra Institute of Higher Education and Research here today by Dr. Renu Swarup, Secretary, Department of Biotechnology, Department of Science & Technology and Chairperson, BIRAC. Participating virtually she said this centre located in a medical university will help the entire spectrum of healthcare industry to translate innovative ideas into useful products and services for the patients. End users engagement is key in innovation with proper clinical validation. This centre should define and guide the incubatees into the regulatory pathway. The centre should also help others in early stage of validation and help roll out their products for commercial use, she said.

Dr. Manish Diwan, Head, Strategic Partnership and Entrepreneurship Development, BIRAC said this centre can identify the unmet needs of clinicians and involve entrepreneurs to come out with innovative solutions. A clinician can also be an entrepreneur he said and listed out several products innovated by doctors and surgeons in the over 60 bionest incubators functioning in the country.

Speaking on the occasion Dr.P.V.Vijayaraghavan, Vice Chancellor said SRIHER provides the conducive ambiance of approved and accredited high quality research laboratories, testing facilities, fulfledged clinical trial division with institutional ethics committee and a 2200 bedded tertiary hospital and 12 constitutent faculties, research scholars which will be accessible to incubating entrepreneurs. Doctors and para medicals are also being encouraged to translate their clinical research into patented products, he added.

Dr. Kalpana Balakrishnan, Dean Research said, Sri Ramachandra Innovation Incubation Centre (SRIIC) is supported by Bio-NEST programme of Bio-technology, Industry Research Assistance Council. The focal areas include clinical validation of medical devices, point of care diagnostic kits, nano technology, artificial intelligence, machine learning based tools in healthcare. First of its kind in Tamil Nadu, it is supported by multiple research facilities, a sophisticated instrumentation facilities with hi-end bio-analytical capabilities and a GLP accredited small animal test facility of SRIHER. For end user validation, CDSCO-approved DCGI-audited full-fledged clinical trial division is also available, she added.

Dr. S.P.Thyagarajan who initiated setting up this centre and presently Chancellor Avinashilingam Institute of Home Science and Higher Education for women, Coimbatore, Dr. Muthu Singaram, CEO, Healthcare Technology Innovation Centre, IIT-Chennai and Dr. Hardeep Vora, CEO, SRIIC were among those who participated in the event.

……………

For more information pl contact…. Prof. Kalpana Balakrishnan, 9841020289
deanresearch@sriramachandra.edu.in
Issued by: Mr. T.G.Nallamuthu, Consultant, Media Relations, Sri Ramachandra Institute of Higher Education and Research, 9940399346, 9444265578, mediarelations@sriramachandra.edu.in.

SRI RAMACHANDRA
INSTITUTE OF HIGHER EDUCATION AND RESEARCH
(Category - I Deemed to be University) Porur, Chennai
Ph.: 044-23860217. www.sriramachandra.edu.in

NEWS RELEASE

# ஸ்ரீ இராமச்சந்திராவில் மருத்துவ புதியன உருவாக்கல் ஆதரவு மையம் துவக்கம்

சென்னை, அக்டோபர் 12, 2021

புதிய மருத்துவ சிகிச்சை கருவிகள், உபகரணங்கள் ஆகியவற்றை படைக்க முனைவோருக்கு உருவாக்கல் ஆதரவு மையம் ஒன்றை ஸ்ரீ இராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் இன்று துவக்கியது. அப்போது மத்திய அரசின் உயிரி தொழில்நுட்பம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை செயலரும் உயிரி தொழில்நுட்பத்துறை ஆய்வு உதவி கவுன்சிலின் தலைவருமான Dr. ரேணு ஸ்வரூப் காணொலி காட்சி மூலம் கலந்து கொண்டு பேசும் போது, ஒரு மருத்துவ பல்கலையில் அமைந்துள்ள இந்த மையம் மருத்துவத்துறையிலுள்ள அனைவரும் தங்களுடை புதிய படைப்புகளை நோயாளிகளுக்கான நவீன பொருட்களாக உருவாக்க உதவும் என்று கூறினார். இப்பொருட்களுக்கு நோயாளிசார்ந்த பயன்பாட்டு ஆய்வு அவசியம் என்றும் இதில் இறுதியில் பயன்படுத்துவோரின் ஈடுபாடு மிகவும் தேவை என்றும் இந்த மையம் மற்ற தொழில் முனைவோருக்கும், நோயாளிசார் பயன்பாட்டை உறுதி செய்து அவற்றை பொருட்களாக உருவாக்க உதவ வேண்டும் என்றும் கூறினார்.

நிகழ்ச்சியில் பேசிய உயிரி தொழில்நுட்பத்துறை ஆய்வு உதவி கவுன்சிலின் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் துறை தலைவர் Dr. மனீஷ் திவான் பேசுகையில் இந்த மையம், நோயாளி சிகிச்சையில் இன்னும் தேவைப்படும் ஆனால் கிடைக்காத பொருட்களையும், சேவைகளையும் கண்டறிந்து தொழில் முனைவோரிடம் பகிர்ந்து புதியன கண்டுபிடிக்க உதவ வேண்டும் என்றார். மருத்தவர்களும், தொழில் முனைவர்களாகலாம் என்று கூறிய அவர் நாட்டில் செயல்படும் 60க்கும் மேற்பட்ட உயிரி தொழில்நுட்ப உருவாக்கல் ஆதரவு மையங்களில் மருத்துவர்கள் உருவாக்கிய பொருட்களை விவரித்தார்.

துணை வேந்தர் Dr. P.V. விஜயராகவன் பேசுகையில், ஸ்ரீ இராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் அங்கீகாரம் மற்றும் மதிப்பீடுகள் பெற்ற உயர்தர ஆய்வு மற்றும் சோதனைக் கூடங்களும், நோயாளிசார் ஆய்வுத்துறையும், நன்நெறி குழுவும் 2200 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையும், 12 துறைக் கல்லூரிகளும், ஆய்வு மாணவர்களும் உள்ள புதியன உருவாக்குவதற்கு ஏதுவான சூழ்நிலை இருப்பதாகவும் இவற்றை தொழில் முனைவோர் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும், மருத்துவர்களும், துணை மருத்துவர்களும் தங்கள் நோயாளிசார் ஆய்வுகளை புதிய கண்டுபிடிப்புகளாக உருவாக்கி அறிவுசார் காப்புரிமை பெற ஊக்குவிக்கப்படுகிறார்கள் என்று கூறினார்.

ஸ்ரீ இராமச்சந்திரா ஆய்வுத்துறை தலைவர் Dr. கல்பனா பாலகிருஷ்ணன் பேசுகையில் இந்த மையம் உயிரி தொழில்நுட்ப தொழில்துறை ஆய்வு உதவிக் கவுன்சிலின் ஆதரவோடு அமைக்கப்பட்டுள்ளது. இதன் முக்கிய இலக்குகள் மருத்துவ உபகரணங்களுக்கு நோயாளிசார் செயல்பாட்டு தரமறிதல், சிகிச்சைக்குத் தேவையான உபகரணங்களை உருவாக்கல், நுண் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு மற்றும் மிஷின் லர்னிங் சார்ந்த மருத்துவக் கருவிகளாகும். முதலாவதாக தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள இந்த மையத்தில் அதிநவீன ஆய்வுக் கருவிகளும், உயர்தர உயிரி ஆய்வுத் திறன்களும், சிறு விலங்குகள்சார் ஆய்வு வசதியும் முழுமையான அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ பரிசோதனை துறையும் உள்ளது என்று கூறினார்.

நிகழ்ச்சியில் இந்த மையத்தை அமைப்பதற்காக முதல் கட்டப் பணிகளை துவக்கியவரும் தற்போது மகளிருக்கான அவினாசிலிங்கம் மனையியல் அறிவியல் மற்றும் உயர்கல்வி நிறுவனத்தின் வேந்தருமான Dr. S.P. தியாகராஜன் சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் மருத்துவ தொழில்நுட்ப புதியன படைப்பு மையத்தின் தலைவர் Dr. முத்து சிங்காரம் மற்றும் ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவ புதியன படைப்பு உருவாக்கல் ஆதரவு மையத்தின் தலைவர் Dr. ஹர்தீப் வோரா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

......மேலும் விவரங்களுக்கு.......... Prof. Kalpana Balakrishnan, 9841020289, deanresearch@sriramachandra.edu.in

Issued by: Mr. T.G.Nallamuthu, Consultant, Media Relations, Sri Ramachandra Institute of Higher Education and Research, 9940399346, 9444265578, mediarelations@sriramachandra.edu.in.